நாள்: 15 மார்ச் 2023

# முஸ்லிம் கலைக் கல்லூரி

திருவிதாங்கோடு

## தமிழ்த்துறை தமிழ் ஆய்வு மையம்
## ஒருங்கிணைக்கும் தேசிய கருத்தரங்கம்

# சான்றிதழ்

முனைவர்/ திரு/ திருமதி/ செல்வி ...பி. ஜினிதா வின்ஸ்......... அவர்கள்


திருவிதாங்கோடு முஸ்லிம் கலைக் கல்லூரி தமிழ் ஆய்வு மையத்தில் நடைபெற்ற

**"தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்"** என்னும் தேசிய கருத்தரங்கில்

"பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் வாழ்வியல் விழுமியங்கள்" என்ற தலைப்பில் பங்கேற்றார்/ கட்டுரை வழங்கினார் எனப் பாராட்டி சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| லயன் Dr.H.முகம்மது அலி | முனைவர் எட்வின் ஷீலா | முனைவர் ஜா.ஞா.ஜோணி ஜெபமலர் |
| கல்லூரி தாளாளர் | கல்லூரி முதல்வர் | தமிழ்த்துறைத்தலைவர் |

Scanned with ACE Scanner



# தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர். ஜா.ஞா.ஜெபமலர்

முனைவர். த.மினி

முனைவர். சௌமியா

# தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்

(தேசிய கருத்தரங்க ஆய்வுக்கோவை)


தமிழ்த்துறை ஆய்வு மையம்
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

பாலிகை பதிப்பகம்

ாளர்கள்

ாணிஜெபமலர்
லைவர்)
மினி
சிரியர்)
ளமியா
சிரியர்)

மப்பு குழு

சேம்
தாஷ்குமார்
து அஸ்கர்
ஏதேஷ்

# பொருளடக்கம்


1. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல்
   - தி.அல்பா கிரேஸ் 17
2. குறுந்தொகையில் உணவு பண்பாட்டு விழுமியங்கள்
   - முனைவர். ஏ.ராணி 23
3. புறநானூற்றில் விருந்தோம்பல்
   - கோ.ஜெமிலா 29
4. புறநானூற்றில் மானுட விழுமியங்கள்
   - போ.சுபா 33
5. ரத்தம் சிந்தும் தேசம் கவிதை தொகுப்பில் சமூக விழுமியங்கள்
   - சி.சு.அன்புக்கொடி பகவதி 40
6. நாலடியாரில் அற சிந்தனைகள்
   - முனைவர் தே. மெர்லின் மினி 45
7. தேம்பாவணி குறிப்பிடும் திரு தூதுவர் காட்சிகள்
   - ச.ஜானகி 51
8. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் வாழ்வியல் விழுமியங்கள்
   - முனைவர் வி.ஜினிதா வின்ஸ் 58
9. சங்க கால பெண்களும் வாழ்வியல் விழுமியங்களும்
   - ரா.ரேகா 63
10. பொன்னிலன் நாவல்களும் சமுதாயமும்
   - த.ஜோஸ்பின் பியூலா 69
11. சங்க இலக்கியத்தில் பெண்களின் நிலைப்பாடுகள்

8

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் வாழ்வியல் விழுமியங்கள்

முனைவர். வி. ஜினிதா வின்ஸ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
முஸ்லிம் கலைக் கல்லூரி,
திருவிதாங்கோடு.

## முன்னுரை

**உ**லகில் தோன்றிய மொழிகளில் மூத்த மொழியாக விளங்குகின்ற தமிழ் மொழி சுமார் 2,500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் தமிழகத்தை ஆண்டனர். இவர்களின் ஆட்சி காலத்தில் மக்கள் எவ்வித பிரச்சனைகளும் இன்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். எனவே சங்க காலத்தை இலக்கியங்களின் பொற்காலம் என்றனர். இக்காலத்திற்கு பின்பு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாயினர். எனவே அவர்கள் கவனம் அறத்தைப் பற்றி சென்றது. அதன் விளைவாக தமிழில் பல்வேறு அறநூல்கள் தோன்றின. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்பட்டன. சங்கம் மருவிய காலத்தையே நீதி நூல் காலம் என்கிறோம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கூறும் வாழ்வியல் விழுமியங்கள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.



**பதினெண் கீழ்க்கணக்கு**

மனித வாழ்க்கையில்
இன்பம் முதலான உறுதிப்
நீதிநூல்கள் அல்லது அறநு
பழைய இலக்கண நூ
பன்னிருப்பாட்டியல்
இலக்கணங்களைத் தருகி

"அடிநிமிர் பில்லாச் செ
அறம் பொருள் இன்பம்
திறம்பட வுரைப்பது கீழ்

(

பதினெண் கீழ்க்கண
மூலமாக அறிந்து கொள்

"நாலடி நான்மணி நால்ந
பால் கடுகம் கோவை பழ
இன்னிலைய காஞ்சியுடன்
கைந்நிலைய வாம் கீழ்க்க

**விழுமியங்கள்**

மனிதனுடைய நம்பிக்
என்பவற்றின் உருவாக்கத்தின்
விழுமியங்கள் எனப்படுகி
வகையாகப் பிரிக்கலாம். அ

1. **தனிமனித விழுமியங்**
2. **பண்பாட்டு விழுமிய**

தனி மனித விழுமியங்கள்
வாழ்வை ஒழுங்கமைப்பதை
அவை ஒட்டு மொத்தமாகச்
அத்தியாவசியமாக இருக்க
சமூகத்தில் பொதுவாக உள்
விழுமியங்கள் எனப்படுகின்
சேர்ந்து வாழ்வதற்கு எந்தெ
தேவைப்படுகின்றனவோ அ
என்னும் நிலையில் உள்ளன.

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

மனித வாழ்க்கையில் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம் முதலான உறுதிப்பொருள் பற்றி எடுத்துரைக்கும் நூல்கள் நீதிநூல்கள் அல்லது அறநூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. பழைய இலக்கண நூல்களுக்கான தொல்காப்பியம், பன்னிருப்பாட்டியல் போன்றவை அறநூல்களுக்கான இலக்கணங்களைத் தருகின்றன.

“அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி யல்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்கணக்கு என்று கூறுகிறது.”

(வச்சணந்தி, பன்னிருப்பாட்டியல் ப.133)

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைக் கீழ்வரும் பாடல் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

“நாலடி நான்மணி நால்நாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி-மா மூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு”. (த.இ.வரலாறு ப.85).

## விழுமியங்கள்

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியங்கள் எனப்படுகின்றன. விழுமியங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை

1. **தனிமனித விழுமியங்கள்**

2. **பண்பாட்டு விழுமியங்கள்**

தனி மனித விழுமியங்கள் என்பவை ஒரு தனி மனிதனுடைய வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டவை. அவை ஒட்டு மொத்தமாகச் சமுதாயத்தின் ஒழுங்கமைவுக்கு அத்தியாவசியமாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகின்றன. அதாவது மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப்பாகத் தேவைப்படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்கள் என்னும் நிலையில் உள்ளன.

**கல்வி**

அறநூல்கள் அக்கால பண்பாட்டை உருவாக்கப்பெரிதும் காரணமாயிருந்தன. ஒருவனுக்கு அழிவில்லாத சிறப்புடைய செல்வம் கல்வியே என்பதை,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை". (குறள். 400)

என்று திருக்குறள் கூறுகிறது.

மேலும், கற்றவரே கண் உடையவர் என்பதை,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்". (குறள். 393)

என கல்வி என்னும் அதிகாரம் கூறுகிறது.

கல்வி கற்பதினால் தான் ஒருவனுக்கு அறியாமை நீங்கி அறிவு வளரும் என்பதை,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு". (குறள். 396)

என்ற குறள் மூலம் அறிய முடிகிறது.

**நாலடியார்**

திருக்குறளுக்கு அடுத்த பெருமை வாய்ந்த 400 வெண்பாக்களால் ஆன நூல் நாலடியார். நாலடியாரில் பொருட்பால் என்னும் அதிகாரத்தில் கல்வி என்னும் தலைப்பில் பத்து பாடல்கள் உள்ளன. கல்வியே ஒரு மனிதனுக்கு சிறந்த அழகு மற்ற அழகுகள் எல்லாம் அழகல்ல என்னும் கருத்து நாலடியாரில் கூறப்பட்டுள்ளது. இதனை,

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு". (நாலடி.131)

என்னும் பாடல் சுட்டுகின்றது.

கற்றவர்கள் பேசுவதில் பிழை ஏற்படுமோ என்று பயந்து எதையும் தேவையில்லாமல் பேசமாட்டார்கள். இதனை,

"கற்றறிந்த நாவினார் சொல்லார் தம் சோர்வஞ்சி

முற்றறைய நாவார் பகர்வர் பனையின் மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி". (நாலடி. 256)

என்ற நாலடியார் பாடல் வெளிப்படுத்துகிறது.

## நட்பு

உற்றமும், சுற்றமும் இனிய வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அவற்றுள் உறவாகிய சொந்தக்காரர்கள் விதி வசத்தால் அமைபவர்கள். ஆனால் நல்ல நண்பர்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை,

"யானை அனையவர் நண்பொரீஇ நாய்அனையார்
கேண்மை கெழிஇக் கொளல் வேண்டும் யானை
அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்". (நாலடி. 213)

என்ற பாடல் மூலம் தெளிவாகிறது.

மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துக்களைக் கூறும் இலக்கியங்கள் தோன்றி வருகின்றன. அவற்றுள் ஒன்று தான் சிறுபஞ்சமூலம் என்னும் நூல். இதில் அறிவுடையார் தாமே உணர்வர் என்பதை,

"பூவாது காய்க்கும் மரம் உள் நன்று அறிவார்
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள் மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு". (சிறுபஞ்சமூலம் பா.எ.22)

என்ற பாடல் தெளிவுபடுத்துகிறது.

## குடிப்பிறப்பு

மனிதனால் நல்லொழுக்கம் மிக்க சான்றோர் எந்தக் குடியில் பிறக்கிறார்கள் என்பதை மட்டும் அறிய முடிவதில்லை என்பதை,

"கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி". (நா.ம.கடிகை. பா.எண்.4)

என்று நான்மணிக்கடிகைப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

நடைமுறை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்க இன்னின்ன என்பதைக் கோவைப்படுத்திக் கூறும் நூலாகி ஆசாரக்கோவை என்னும் நூலில், ஆசார வித்துக்களா நன்றியறிதல், பொறுமை, கல்வி, ஒப்புரவு, அறிவு, நட்பு என் எட்டு என்கிறார். இதனை,

"நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு அற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து". (ஆ.கோவை.பா.எண்.

என்கிறார்.

மதுரைக் கூடலூர் கிழார் எழுதிய முதுமொழிக் காஞ் என்னும் நூலில்,

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை
மக்கட் பேற்றின் பெரும் பேறு இல்லை". (மு.மொ.காஞ்சி பா.எ

என்று தெளிவுப்படுத்துகிறார்.

இவை தவிர பிற்காலத்தில் ஔவையார், குமரகுருபர அதிவீரராம பாண்டியர், பாரதியார் போன்ற புலவர்கள நீதி நூல்களை இயற்றியுள்ளனர். பதினாறாம் நூற்றாண்டி தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வ அதிவீரராம பாண்டியர், "வெற்றி வேற்கை" என்னும் நூலி

"கல்விக்கழகு கசடற மொழிதல்,
அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்".
(வெ.வேற்கை.பா.எ.

என்கிறார்.

உலகநாத பண்டிதர் உலகநீதியில்,
"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்". (உ.நீதி. பா.எண்

என்கிறார்.

## முடிவுரை

இவ்வாறு பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்களில் கல் நட்பு, குடிப்பிறப்பு என பல அமைப்பு முறை விழுமியங்க அமைந்துள்ளப் பாங்கை இக்கட்டுரையின் வாயிலாக அற முடிகிறது.

ISBN : 9789356 801301

நடைமுறை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்க இன்னின்ன என்பதைக் கோவைப்படுத்திக் கூறும் நூலாகி ஆசாரக்கோவை என்னும் நூலில், ஆசார வித்துக்களா நன்றியறிதல், பொறுமை, கல்வி, ஒப்புரவு, அறிவு, நட்பு என் எட்டு என்கிறார். இதனை,

"நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு அற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து". (ஆ.கோவை.பா.எண்.

என்கிறார்.

மதுரைக் கூடலூர் கிழார் எழுதிய முதுமொழிக் காஞ் என்னும் நூலில்,

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை
மக்கட் பேற்றின் பெரும் பேறு இல்லை". (மு.மொ.காஞ்சி பா.எ

என்று தெளிவுப்படுத்துகிறார்.

இவை தவிர பிற்காலத்தில் ஔவையார், குமரகுருபர அதிவீரராம பாண்டியர், பாரதியார் போன்ற புலவர்கள நீதி நூல்களை இயற்றியுள்ளனர். பதினாறாம் நூற்றாண்டி தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வ அதிவீரராம பாண்டியர், "வெற்றி வேற்கை" என்னும் நூலி

"கல்விக்கழகு கசடற மொழிதல்,
அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்".
(வெ.வேற்கை.பா.எ.

என்கிறார்.

உலகநாத பண்டிதர் உலகநீதியில்,
"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்". (உ.நீதி. பா.எண்

என்கிறார்.

## முடிவுரை

இவ்வாறு பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்களில் கல் நட்பு, குடிப்பிறப்பு என பல அமைப்பு முறை விழுமியங்க அமைந்துள்ளப் பாங்கை இக்கட்டுரையின் வாயிலாக அற முடிகிறது.